முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பில் ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் தலைமையில், ஆர்.நவீன் ராஜ் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் கபடி போட்டியை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிக்கு பரிசுகள் வழங்கினார். உடன் ஜனார்த்தனன், முனு.ஆதித்தியன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, மணம்பூண்டி ஒன்றியம் அருணாபுரம் ஊராட்சியில் கடந்த 29.03.2025 அன்று நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியிடம் கோரிக்கை வைத்த மாற்றுத்திறனாளி சிறுமி பரமேஸ்வரி தனக்கு பேட்டரி பொருந்திய மாற்றுத்திறனாளி வாகனம் வேண்டும் என கோரிக்கை வைத்தார். உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒரே நாளில் அந்த சிறுமிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வழங்கினார். மாவட்ட ஆட்சியர் சேக் அப்துல் ரகுமான், சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், நகரச் செயலாளர் இரா.சக்கரை, நகர மன்றத் தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, பேரூர் செயலாளர் பா ஜீவா, தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு, ஒன்றிய அவைத் தலைவர் சக்தி சிவம் , ஊராட்சி மன்றத் தலைவர் ஆறுமுகம் , கவுன்சிலர் சூரிய கலா, கிளை செயலாளர்கள் பாண்டுரங்கன், பாபு ஈஸ்டர் ராஜன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

மேட்டுப்பாளையம் நகராட்சியில் பாதாள சாக்கடைப் பணிகள் விரைந்து முடிக்க நடவடிக்கை!

சட்டப்பேரவையில் – நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு விளக்கம்!

சென்னை, ஏப்.01-

சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் ஏ.கே.செல்வராஜ், "மேட்டுப்பாளையம் நகராட்சியிலே நடைபெற்று வரும் பாதாள சாக்கடைப் பணிகளில் விடுபட்ட பகுதிகளைச் சேர்த்து, விரைந்து முடித்து பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது" குறித்து வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில், அ.தி.மு.க. உறுப்பினர் ஏ.கே.செல்வராஜ், மேட்டுப்பாளையம் நகராட்சியிலே நடைபெற்று வரும் பாதாள சாக்கடைப் பணிகளில் விடுபட்ட பகுதிகளைச் சேர்த்து, பயன்பாட்டுக்குக் கொண்டு வருவது குறித்து வலயுறுத்தினார்.

அதற்கு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலுரை வருமாறு:

மேட்டுப்பாளையம் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டமானது, நகராட்சியின் 33 வார்டுகளுக்கு 9-9-2016-ல் KfW 2016-? 2017 திட்டத்தின்கீழ் ரூ.100.07 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக இத்திட்டமானது மூன்று சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று தற்சமயம் பணிகள் முடிவடைந்து, சோதனை ஓட்டத்தில் உள்ளது. மேட்டுப்பாளையம் நகராட்சி வாயிலாக 2,770 வீட்டு இணைப்புகள் கொடுக்கப்பட்டு, மக்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளன. வீட்டு இணைப்புகள் வழங்கும் ஒப்பந்ததாரர் காலதாமதமாக பணி மேற்கொள்ளும் காரணத்தால், ஒப்பந்தப்புள்ளி இரத்து செய்யப்பட்டது. தற்போது திருத்திய நிர்வாக அனுமதி பெற்று, மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 3-3-2025 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி பாதாள சாக்கடை வீட்டு இணைப்புப் பணிகள் அனைத்தும் 30-9-2025-க்குள் முடிக்கப்படும்.

மேலும், 2015 ஆம் ஆண்டு நில அளவைப்படி தயாரிக்கப்பட்ட இத்திட்டத்தினை தற்சமயம் நகரின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் புதிதாக உருவான ஒருசில குடியிருப்புப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற அப்பகுதி பொதுமக்களின் வேண்டுகோளினை செயல்படுத்த மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்றத் தீர்மான எண் 139, நாள் 27-9-2024-ல் அனுமதிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் பணிகளை மேற்கொள்ள உத்தேசி மேட்டுப்பாளையம் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக 22-5-1998 ஆம் ஆண்டு தரமுயர்த்தப்பட்டது. 33 வார்டுகளையும், 7.2 சதுர கிலோமீட்டர் பரப்பளவும் கொண்ட இந்நகராட்சியின் மொத்த மக்கள் தொகை 69,123 (2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி) தற்போதைய மக்கள் தொகை சுமார் 88,247. இந்நகராட்சிக்கு

2016-2017 ஆம் நிதியாண்டில் ஜெர்மன் வங்கி நிதியுதவியுடன் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டு 91,70 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மேலும் திருத்திய ஒதுக்கீடாக 2018 ஆம் ஆண்டு 100.07 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்பட்டு, தற்போது இப்பணிகள் முழுவதும் முடிக்கப்பட்டு, சோதனை ஓட்டத்தில் உள்ளது. இத்திட்டத்தில் 75 கி.மீ. நீளமுள்ள கழிவுநீர் சேகரிப்பு குழாய்மூலம் சேகரமாகும் கழிவுநீர், சிக்கதாசம்பாளையம் என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள 8.65 MLD சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்மூலம் சுத்திகரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஏற்கெனவே 2,539 வீட்டு கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டன. 2022-2023 ஆம் ஆண்டு முதல் ரூ.6.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 7,957 இணைப்புகள் வழங்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இணைப்புகள் வழங்கும் பணிகள் செப்டம்பர் 2025-க்குள் முடிக்கப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள். இதோடு, விடுபட்ட பகுதிகளிலுள்ள சுமார் 8,000 வீடுகளுக்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் இணைப்புகள் புதைவடிகுழாய்கள் அமைத்து வழங்குவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. செப்டம்பர் 2025-க்குள் அனைத்து பணிகளும் முடிந்து, பொதுமக்களுடைய பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற ஒப்பந்தங்களைப் போல் இந்த ஒப்பந்தம் இருப்பதில்லை. பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரை, படிப்படியாக மிகவும் சிரமத்துடன்தான் அப்பணியை முடிக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு முடிக்கும் போது, சில இடங்களில் மேடு, பள்ளம் ஏற்பட்டு, manhole வழியாக தண்ணீர் வெளியேறுவது இயற்கையாக தற்போது நடைபெறுகிறது. அந்தப் பணிகள் 2025-ல் முடிவடையும் போது, மற்ற அனைத்து இடங்களிலுமுள்ள manholes அடைக்கப்பட்டு, மேடு, பள்ளங்கள் இருந்தால், அவையும் சரி செய்யப்பட்டு, தண்ணீர் எந்த இடத்திலும் வீணாகாமல் செல்வதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். அதில் ஒன்றும் மாற்றம் இல்லை. தற்போது தற்காலிகமாக இருப்பதை மாற்றியமைப்பது குறித்து அதிகாரிகளுடன் கலந்து பேசி, அதற்கு முழுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், பொள்ளாச்சியில் சுத்திகரிக்கப்பட்ட நீர் கொடுக்கும்போது, அந்தத் தண்ணீர் விவசாயத்திற்குத் தேவை என்று விவசாயிகள் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், கிழக்கும் மேற்குமாக விவசாயத்திற்கு கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நீரும் ஆற்றில் கலக்காமல் விவசாயத்திற்குப் பயன்படுகிற வகையில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, அதற்குரிய ஏற்பாட்டினைச் செய்யலாம் என்பது ஒன்று. அடுத்து, குறிப்பாக ஒன்றை நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். மற்ற இடங்களில் எல்லாம் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்படாமல், வெளியில் சாக்கடை நீர் ஓடுவதால், துர்நாற்றம் வீசுகிறது, கொசு வருகிறது என்பதால்தான், மக்களுக்கு நன்மை பயக்கும்பொருட்டு, பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்பட்டு, சுத்திகரிப்பு நிலையம்மூலம் சுத்திகரிக்கப்பட்ட நீரை, மறுபடியும் ஆற்றில் விடுவதால் நீர் மாசுபடுகிறது என்றெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், விஞ்ஞான முறைப்படி 100 லிட்டர் கழிவுநீரை சுத்திகரித்தால், அதில் வெறும் 6 லிட்டர், 7 லிட்டர் அளவிற்குத்தான் கழிவு போகும். எஞ்சிய 94, 93 லிட்டர் நல்ல நீராகத்தான் வரும். மற்ற நாடுகளை எடுத்துக்கொண்டால், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் அந்த நீரை குடிநீராகக்கூட பயன்படுத்துகிறார்கள். எனவே, முதலில் STP அமைக்கும்போது, தங்கள் பகுதியில் நாற்றம் ஏற்படுவதாகச் சொல்கிறார்கள். பின்னர், சுத்திகரித்துத் தரும்போது, அந்தத் தண்ணீரே வேண்டாம் என்று சொல்கிறார்கள். இவையெல்லாம் நம்முடைய மக்கள் மனதில் எழுந்திருக்கின்ற சந்தேகங்கள். அவற்றைத் தீர்க்கும் பொருட்டுத்தான் இதைச் சொல்கிறேன். எனவே, சுத்திகரிக்கப்பட்ட நீர், நல்ல நீராகத்தான் வருகிறது. அதை ஆற்றில் விட்டாலும், நேரடியாக விவசாயத்திற்குப் பயன்படுத்துவதாக இருந்தாலும், அந்தப் பகுதியிலுள்ள மக்களின் விருப்பம் என்னவோ, அதன்படி செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள

விக்டோரியா பொது அரங்கம் ரூ.32.62 கோடி மதிப்பில் புனரமைப்பு பணி!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு மேற்கொண்டார்! மேயர் ஆர்.பிரியா பங்கேற்பு!

சென்னை, ஏப்.01

பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள விக்டோரியா பொது அரங்கில் சிங்கார சென்னை 2.0 திட்ட நிதியில் ரூ.32.62 கோடி மதிப்பில் அதன் தொன்மை மாறாமல் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பணிகளை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் நேற்று (31.03.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, அமைச்சர் அவர்கள் திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க.நகர் மண்டலம், பெரம்பூர், முரசொலி மாறன் பூங்காவினை மேம்படுத்துவது குறித்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திரு.வி.க.நகர் மண்டலம், எஸ்.ஆர்.பி. கோயில் தெருவில் உள்ள கலைஞர் மு.கருணாநிதி பூங்காவினை மேம்படுத்துவது குறித்துப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

இதன் தொடர்ச்சியாக, திரு.வி.க.நகர் பிரதான சாலையில் அமைந்துள்ள பெண்கள் உடற்பயிற்சிக் கூடத்தினைப் பார்வையிட்டு, நல்ல முறையில் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, முத்து குமாரப்பா சாலையில் ரூ.13.47 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக் கூடப் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வுகளில், மேயர் பிரியா செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, ரிப்பன் கட்டட வளாகத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க விக்டோரியா பொது அரங்கினை புனரமைக்கும் பணியினை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் 2023-ஆம் ஆண்டு தொடங்கி வைத்தார்கள். இதனைத் தொடர்ந்து மறுசீரமைப்புப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நீதிக்கட்சி தொடங்கிய இடம் இந்த விக்டோரியா பொது அரங்கம். இந்த அரங்கில் என்னென்ன சிறப்புகள் இருந்ததோ, அவற்றை பொதுமக்கள் அறியும் வகையில் அருங்காட்சியகமாக அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தக் கட்டடத்தின் முதல் தளத்தில் ஒரு கலையரங்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பணிகளை விரைந்து முடித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த மறுசீரமைப்புப் பணிகளுக்கு ரூ.32.62 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வருகின்ற ஜீன் மாதத்திற்குள் இந்தப் பணிகள் முடிக்கப்படும்.

பொதுமக்களின் கோரிக்கைக்கிணங்க, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முத்து குமாரப்பா சாலையில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக் கூடப் பணிகளை நேரில் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் கூடம் 800 இருக்கைகளுடன் தரைத்தளம் மற்றும் இரண்டு தளங்களுடன் அமைக்கப்பட்டு வருகிறது.

மேலும், முரசொலி மாறன் பூங்காவினை மேம்படுத்துவது குறித்து அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவாக ஒன்றிய அரசின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு நாணயம் வெளியிடப்பட்டது. அதன் நினைவாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, முரசொலி மாறன் பூங்காவிலோ அல்லது பெருநகர சென்னை மாநகராட்சியின் கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியின் பிற பூங்காவிலோ முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு எல்லார்க்கும் எல்லாம் என்கிற கொள்கையை சாதி, சமயம் மற்றும் மதங்களுக்கு அப்பாற்பட்டு சுதந்திரமான சுவாசக்காற்றை அந்தந்த மதத்தினர் விரும்புகின்ற வழிபாடுகளை நடத்துவதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்ற ஆட்சியாக உள்ளது. ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் ஓட்டினார். அதில் எந்தவிதமான மதம் மற்றும் சாதி சம்பந்தப்பட்ட இடர்பாடுகள் இல்லாதிருந்தது. கண்ணம்மா தேவி தேர் கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு மேலாக ஓடாமல் இருந்தது. நம்முடைய முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு இருபிரிவினருக்கிடையே இருந்த மோதல்களை முடிவிற்கு கொண்டு வந்து கண்ணம்மா தேவி தேரையும் ஓட்டிய பெருமை நம்முடைய முதல்வர் அவர்களைச் சாரும்.

திரௌபதி அம்மன் கோயில் பூஜை முறைகள் அன்றாடம் நடைபெறுவதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு வார காலத்திற்குள்ளாக அந்தத் திருக்கோயில் திறக்கப்பட இருக்கிறது. நம்முடைய முதல்வர் ஆட்சி பொறுப்பேற்றபிறகு தான் சேலம் போன்ற பல நகரங்களில் மதத்தால், இனத்தால் அல்லது மொழியால் பிளவுபட்டிருந்த இருவேறு பிரிவினர்களுக்கிடைய தீர்க்கப்படாமல் இருந்த மோதல்களை சமாதானப்படுத்தி, பல வருடங்களாக தரிசனம் இல்லாமல் பூட்டிக் கிடந்த 40 திருக்கோயில்கள் மீண்டும் திறக்கப்பட்ட பெருமை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையே சாரும். அந்த வகையில் திரௌபதி அம்மன் திருக்கோயிலும் வெகுவிரைவில் பக்தர்கள் இறை தரிசனத்திற்கு ஒப்படைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, மேயர் திருமதி ஆர். பிரியா, ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள் நாகராஜ், திருமதி புனிதவதி எத்திராஜ், திருமதி ஸ்ரீதனி, திருமதி சாரதா, திருமதி யோகப்பிரியா, திருமதி அமுதா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ப.மகேஷ்ராஜா தலைமையில் முதல்வர் பிறந்தநாள்!

106வது வட்ட தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்! நல உதவிகள்!

சிவாஜி கிருஷ்ணமூர்த்தி – ஸ்ரீலேகா – நே.சிற்றரசு – தயாநிதிமாறன் சிறப்புரை!

சென்னை, ஏப். 1-

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணாநகர் தெற்கு பகுதி, 106 வட்ட திமுக சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் பொதுக்கூட்டம் இன்று 1-4-2025 செவ்வாய்கிழமை மாலை 5.00 மணிக்கு சென்னை-106, எம்.எம்.டி.ஏ காலனி, காயிதேமில்லத் தெரு, முத்துமாரியம்மன் கோயில் எதிரில் 106 வது வட்ட கழக செயலாளர் ப.மகேஷ்ராஜா தலைமையில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் எ.கே.மூத்தி, எஸ்.பி.குமார், ஆர்.எஸ்.கில்பர்ட், பானுமதிகிருஷ்ணசாமி, ந.அதியமான் எம்.சி, இரா.பொன்னுரங்கம், இரா.நவீந்திரகுமார், தெ.கருணாநிதி, வி.எம்.சிவா. ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்.அன்பில்பாபு, எம்.எஸ்.சோமசுந்தரம், வெ.சண்முகம், கு.அமலகனி, T.T.S.மணி, பகுதி பிரதிநிதிகள். கு.ரவி, ஜி.காமராஜ், ஆ.செல்வராஜ், கே.முகமது அலி, வி.வெங்கடேசன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள். நலத்திட்ட உதவிகள் வழிங்கி சிறப்புரை ஆற்றுவோர்/

தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, தலைமை கழக இளம் பேச்சாளர் ஸ்ரீலேகா, சென்னை மேற்கு மாட்ட செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி பணிகள் குழு தலைவர் நே.சிற்றரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர். திமுக விளையாட்டு மேம்பாட்டு செயலாளர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.கே.மோகன் அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளர், பெருநகர சென்னை மாநகாரட்சி ஆளுங்கட்சி தலைவர் ந. இராமலிங்கம் எம்.சி., தகவல் தொழில் நுட்ப அணி கார்த்திக் மோகன் மற்றும் டாக்டர்.நா.சந்திரபாபு, சி.சேரன், ஏ.டி.முருகன், கராத்தே ஆனந்தன், இராணி ரவிச்சந்திரன் எம்.சி. எஸ் ராம்குமார் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை. ஏ.சங்கீதா, எஸ்.அகஸ்டீன்பாபு, ஜ.கென்னடி மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், பகுதி அமைப்பாளர்கள், முன்னாள் நிர்வாகிகள், பகுதி துணை அமைப்பாளர்கள், பாகமுவர்கள், வட்ட செயல்வீரர்கள் அனைவரும் கலந்துகொள்கின்றனர்.

நிகழ்ச்சி இறுதியில் வட்ட துணைச் செயலாளர் மு.ப.சங்கர் நன்றியுரை ஆற்றுகிறார்.

சிதம்பரம் தொகுதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்

அ.முருகேசன் மறைவு!

இன்று இறுதி ஊர்வலம்!

சிதம்பரம், ஏப்.01

சிதம்பரம் நாடாளுமன்றத் தொகுதி முன்னாள் உறுப்பினரும், அகில இந்திய பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சங்க செயலாளருமான அ.முருகேசன் அவர்கள் (வயது 87) நேற்று (31.3.2025) சென்னையில் இயற்கையெய்தினார் என்பதனை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த அ.முருகேசன் அவர்களின் இறுதி ஊர்வலம் இன்று (1.4.2025-செவ்வாய்க்கிழமை) மாலை 5 மணியளவில் சிதம்பரம் மாரியப்பன் நகரில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகின்றன.

வை.ம.அருள்தாசன் ஏற்பாடு – திருவொற்றியூர் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில்

முதல்வர் பிறந்த நாள் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது!

மாதவரம் எஸ்.சுதர்சனம் பங்கேற்பு! முன்னிலை! டி.சேகர், எம்.சந்திரகுமார் ந.ராம்குமார் வரவேற்பு!

சென்னை, ஏப். 1-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்த நாளை முன்னிட்டு கழக இளைஞரணி செயலாளர் துணைமுதல்வர் வழிகாட்டுதலின்படி மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுத்தலின்படி பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன் ஏற்பாட்டில் வட்டக் கழக பொறுப்பாளர் டி.சேகர் எக்ஸ் எம்.சி. முன்னிலையில் மாவட்ட பிரதிநிதிகள் எம்.சந்திரகுமார் ந.ராம்குமார் வரவேற்பில் 29.03.2025 காலை 9:00 மணியளவில் எண்ணூர் கத்திவாக்கம் நடு நிலைப்பள்ளியில் மாபெரும் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

சிறப்பு மருத்துவ நிபுணர்கள் பங்கேற்று சிகிச்சை வழங்கிய இந்த மாபெரும் முகாமில் 500-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்று பயனடைந்தார்கள்.

தோல் நோய், சர்க்கரை வியாதி, பொது மருத்துவம், மற்றும் இரத்தப்பரிசோதனை, பொது உடல் பரிசோதனை போன்ற நோய்களுக்கு சிறப்பு வாய்ந்த மருத்துவர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டது.

உடனடியாக அதே இடத்தில் அவர்களுக்கு உரிய தரமான மருந்துகளும், மாத்திரைகளும் இலவசமாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக அரிமா வீ.தியாகராஜன், ஆர்.நவகுமார், வை.ம.கண்ணதாசன், டி. சக்கரவர்த்தி, வை.சின்னையன், மு.கார்த்திக் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இரண்டாவது வட்டக் கழக நிர்வாகிகள் டி.எஸ்.மணி க.பாலு ரா.மதன்குமார், டி.கண்ணன், எஸ்.தேவி, சி.ஜெயபிரகாஷ், பா.சுந்தர், லைலாண்ட் ஆர்.முருகன், டி.தேசிங்கு, டி.தேசப்பன், மு.பாபு, ச.முத்து, எஸ்.கௌதம், இ.சங்கர், ஆர்.விஜி, வி.தேசப்பன், பா.அஜித் , எஸ்.யுவராஜ்,

போஸ் வினோத் மற்றும் மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், பாக முகவர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி கொத்த மங்கலம் சாலையில் உள்ள ஈத்காமைதானத்தில் நடந்த ரம்ஜான் பண்டிகையின் சிறப்பு தொழுகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டார். உடன் செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் உள்ளிட்ட இஸ்லாமியப் பெருமக்கள் உள்ளனர்.